# OS.No.463/2024, Dated 18.02.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 18th day of February 2026.

**பி.வா.சா.3 – சௌந்தராஜன் த/பெ. மண்ணாங்கட்டி வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது பூர்வீகம் தேசூர் கோட்டை தெரு ஆகும். நான் SSLC வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் வாதியின் தாய் மாமா ஆவேன். பிரதிவாதி எனது நெருங்கிய நண்பர் ஆவார். பிரதிவாதி எனக்கு 15 வருடங்கள் முன்பிருந்து பழக்கம் ஆகும். பிரதிவாதியும் விவசாய வேலை செய்கிறார். வாதியின் தாயாருக்கும் எனக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் 7, 8 மாதங்களாகதான் எனக்கும் அவருக்கும் பிரச்சனை உள்ளது. எனக்கும் அவருக்கும் சில வருடங்களாக பிரச்சனை உள்ளது என்றால் இல்லை. சமீபமாகதான் பிரச்சனை ஏற்பட்டது. வாதி பிரதிவாதி அவருக்கு ரூ,2,00,000/– கொடுக்க வேண்டும் என்று கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். 04.09.2015 அன்று தெள்ளார் சார்பதிவாளர் அலுவலகத்தில் பிரதிவாதி வாதிக்கு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தார். அந்த அடமான பத்திரம் ஏற்படுத்துவதற்கு பிரதிவாதி தான் ஆவண எழுத்தரை அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதிக்கு அந்த ஆவண எழுத்தர் யார் என்று தெரியாது என்றால் சரிதான். அந்த அடமான ஆவணத்தில் நான் ஒரு சாட்சியாகவும் தேசூரைச் சேர்ந்த மற்றொரு நபர் சாட்சியாகவும் கையொப்பம் செய்தோம். சாட்சிகள் இருவரையுமே அன்றைய தினம் ஆறுமுகம் தான் அழைத்து வந்தார். நானும், ஆறுமுகமும் அந்த அடமான ஆவணத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தோம். வாதி பிரதிவாதியிடம் சார்பதிவாளர் அலுவலத்தில் வைத்து ரூ.1,00,000/– தான் கொடுத்தார். மீதி ரூ.50,000/– யை வாதியின் வீட்டில் வைத்துதான் கொடுத்தார். வாதியின் வீடு கொளத்தூரில் உள்ளது. அங்கு வைத்து தான் கொடுத்தார். மேற்சொன்ன மீதி பணமான ரூ.50,000/–த்தை 15 நாட்கள் கழித்து கொடுத்தார். வட்டி ரூ.4,500/– யை கழித்து விட்டு மீதம் ரூ.45,500/–யை வாதி பிரதிவாதியிடம் கொடுத்தார். மேற்சொன்ன தகவலை நான் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. தெள்ளார் சார்பதிவாளர் அலுவலத்தில் வைத்து தான் வாதி பிரதிவாதிக்கு ரூ.1,00,000/– கடனாக கொடுத்தார். யார் முன்னிலையில் அந்த பணத்தை கொடுத்தார் என்றால் நான் மற்றும் மற்றொரு சாட்சி கையெழுத்து போட்ட நபர் ஆகியோர் முன்னிலையில் வாதி பிரதிவாதியிடம் ரூ.1,00,000/–தை கொடுத்தார். பிரதிவாதி வாதியிடம் 3 பைசா வட்டிக்கு கடனை வாங்கினார். 3

பைசா வட்டிக்கு வாங்கினார் என்ற தகவலை நான் எனது நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. ரூ.500/– பழைய மற்றும் புதிய ரூபாய் நோட்டுகளாய் சேர்த்து வாதி பிரதிவாதிக்கு இரண்டு கட்டுகளாக பணத்தை கொடுத்தார். அடமான பத்திரம் தவிர வேறு எந்த ஆவணங்களையும் பிரதிவாதி வாதியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அடமானம் போடப்பட்ட சொத்து மேல்பாதி கிராமத்தில் உள்ளது. பிரதிவாதி வாதிக்கு ரூ.85,000/– இறுதியாக வட்டியாக கொடுத்தார். அதற்கு முன்பு அவர் வாதிக்கு வட்டி பணம் அனுப்பிக்கொண்டிருந்தார். அது எவ்வளவு என்று எனக்கு சரியாக தெரியாது. மொத்தமாக இதுவரை எவ்வளவு பணம் வட்டியாக வாதி செலுத்தி வந்தார் என்று என்னிடம் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் கொடுத்து வந்ததாக சொன்னார். பிரதிவாதி வாதிக்கு ரூ.85,000/– யை கொளத்தூரில் உள்ள வாதியின் வீட்டில் வைத்து கொடுத்தார். அவ்வாறு அவர் ரூ.85,000/– கொடுக்கும் போது நானும் உடன் சென்றிருந்தேன். எந்த தேதியில் கொடுத்தார் என்று தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வாதி பிரதிவாதியிடம் சார்பதிவாளர் அலுவலத்தில ரூ.2,00,000/– கடனாக கொடுத்தார் என்றால் இல்லை. மீதி ரூ.50,000/–த்தை வாதி கொடுக்கவில்லை என்று பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் வாதி பிரதிவாதியிடையே பணத்தை பைசல் செய்யும் போது ரூ.1,50,000/– கொடுத்தால் போதும் என்று பேசப்பட்டிருந்தது. ரூ.1,50,000/– தான் கடன் கொடுத்தார் என்பதற்கு எழுதி வாங்கப்பட்டதா என்றால் இல்லை. ரூ.85,000/– வட்டிக்காக பிரதிவாதி கொடுத்ததாக சொல்லும் தொகைக்கு அவர் ஏதாவது எழுதி வாங்கினாரா என்றால் இல்லை. அசல் தொகை ஏதாவது பிரதிவாதி வாதிக்கு கொடுத்தாரா என்றால் அசலுக்கும் பணம் கொடுத்து தான் வந்தார். எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அடமான கடன் சம்பந்தமாக பிரதிவாதி என்னிடம் எதாவது பணம் கொடுத்தாரா என்றால் என் மூலமாக அவர் பணம் கொடுக்கவில்லை. அவர் நேரடியாக அவரது கணக்கிற்கு அனுப்பினார். பிரதிவாதி என்னிடம் ரூ.1,50,000/– பணம் கொடுத்ததாக ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தால் அது பொய்யான ஆவணம் என்றால் சரிதான். குளத்தூரில் வைத்து பிரதிவாதி வாதிக்கு எவ்வித பணமும் கொடுக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரயில்ல. குளத்தூரில் பிரதிவாதி வாதிக்கு பணம் கொடுத்த போது, நானும், பிரதிவாதியும் தான் அங்கு இருந்தோம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அவ்வாறு பணம் கொடுத்திருந்தால் நாங்கள் அன்றைய தினமே வாதியிடம் பைசல் ரசீது பெற்றிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. யாரும் பைசல் கொடுப்பதில்லை. அன்றைய தினமும் அவர் கொடுக்கவில்லை.

வழக்கறிஞர் அறிவிப்பு ஏதாவது அனுப்பி அடமானப்பத்திரத்தை இரத்து செய்ய பிரதிவாதி கோரினாரா என்றால் இல்லை. எனக்கும், வாதியின் தாயாருக்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளதால் தான் வாதிக்கு எதிராக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எவ்வித ஆவணமும் எழுதி கையெழுத்து போட்டு கொடுத்ததில்லை. தாவாவில் கோரியுள்ள படி பிரதிவாதி அசல் மற்றும் வட்டியுடன் வாதிக்கு தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.18 14:18:45 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி